IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | **111/2022** |
| | | P/ W's | : | **PW1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | அமுதவாணி | CASTE | : | |
| D/O | நடராஜன் | RELIGION | : | **இந்து** |
| VILLAGE | டி. ஆண்டிப்பட்டி | CALLING | : | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | : | **47** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 09.07.2025**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. 1ம் பிரதிவாதி இறந்துபோன ராமச்சந்திரனின் மருமகள், இறந்து போன சரவணனின் மனைவி. சரவணன் என்பவர் ராமச்சந்திரனின் மகன். 2ம் பிரதிவாதி ராமச்சந்திரனின் மகள். 1ம் வாதி ராமச்சந்திரனின் உடன்பிறந்த சகோதரி ஆவார். 1ம் வாதி மெயின்ரோட்டிற்கு அருகில் உள்ள வீட்டில்தான் குடியிருந்து வருகிறார். எனது மாமா ராமச்சந்திரன் ஆண்டிப்பட்டி 2வது வார்டில் உள்ள வீட்டில் குடியிருந்தார். 1ம் வாதி வீட்டிற்கும், ராமச்சந்திரன் வீட்டிற்கும் இடையே 5 நிமிடம் நடந்து செல்லும் தூரம் இருக்கும்.

2. நான், எனது பெற்றோர் மற்றும் எனது தம்பி ஒரே வீட்டில் குடியிருக்கிறோம். இன்று என்னுடன் எனது அப்பாவும், ஆண்டி என்பவரும் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார்கள். ஆண்டி என்பவரின் 7 வயதில் அவருடைய பெற்றோர்கள் இறந்தபிறகு எங்கள் வீட்டில் அவரை பராமரித்து வந்தோம், தற்போது வரை அவர் எங்கள் வீட்டில்தான் உள்ளார். வா.சா.ஆ.6 மற்றும் 7ல் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவிற்கான மனுக்களை எனது தாயார் தாக்கல் செய்தார். எனது தாயார் எதற்காக மேற்படி மனுக்களை தாக்கல் செய்தார் என்று நேரடியாக எனக்குத்தெரியாது.

3. எனது அப்பா சொந்த நிலத்தில் விவசாயம் செய்து வருகிறார். எனது அப்பாவின் நிலத்தின் வகைப்பாடு மற்றும் விஸ்தீரணம் எனக்குத்தெரியாது. சரவணன் இறக்கும்வரை ராமச்சந்திரனின் வீட்டில் ஒன்றாகத்தான் குடியிருந்தார்கள். சரவணன் 22.08.2020ம் தேதி இறந்தார். வழக்குச்சொத்துக்கள் ராமச்சந்திரனுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்ற விவரம் எனக்குத்தெரியாது. வழக்குச்சொத்துக்களின் விஸ்தீரணம், சர்வே எண் மற்றும் வகைப்பாடு தெரியாது என்றால் சரியல்ல.

4. வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் உள்ள சங்கதிகள் எங்குவைத்து யாரால் தயார் செய்யப்பட்டது என்று எனக்குத்தெரியாது. மேற்படி உயில் ஆவணத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்,

படித்துக்காண்பித்தார்கள். மேற்படி உயில் ஆவணத்தில் ஆண்டித்தேவர் மற்றும் ராமச்சந்திரன் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள். மேற்படி ஆண்டித்தேவர் தான் இன்றையதினம் என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். மேற்படி உயில் ஆவணத்தில் 4 சொத்துக்கள் அடங்கி உள்ளது. மேற்படி 4 சொத்துக்களும் சொத்துவிவரம் தெரியுமா என்றால் எனக்கும் எனது தாயாருக்கும் எழுதிக்கொடுக்கப்பட்ட சொத்துக்கள் பற்றி தெரியும், மற்ற சொத்துக்கள் பற்றி எனக்குத்தெரியாது.

5. எனது அம்மாவின் பெயருக்கு எழுதித்தரப்பட்ட சொத்தின் சர்வே எண் 179/3C.80/2B வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் நோட்டரி பப்ளிக் என் கையெழுத்து உள்ளது, அந்த நோட்டரி பப்ளிக் வழக்கறிஞரின் பெயர் தெரியாது. வா.சா.ஆ.1 உயில் ஆவணமானது எனது மாமா இறப்பிற்கு பிறகு எனது அப்பாவால் போலியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி உயிலில் உள்ள எனது மாமாவின் கையெழுத்தும், நோட்டரி பப்ளிக்கின் கையெழுத்தும் எனது அப்பாவால் போடப்பட்டது என்றால் சரியல்ல.

6. வா.சா.ஆ.9 பட்டா எனது மாமா ராமச்சந்திரன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டா எந்தச்சொத்திற்கானது என்றால் விவசாய நிலத்திற்கானது. எனது மாமா அவர் மகன் இறந்தகாலத்திலிருந்து உடல்நிலை சரியில்லாமல் உயில் எழுதி வைப்பதற்கான மனநிலை இல்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 உயில் ஆவணத்தை எனது மாமா எழுதிவைக்கவில்லை என்றாலும் அது செல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. வழக்குச்சொத்துக்கள் எனது மாமா இறக்கும்வரை அவரது அனுபவத்திலிருந்து, அவர் இறந்தபிறகு 4 ம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல.

7. வழக்குச்சொத்தில் எங்கள் அனுபவத்தை காட்ட ஆவணம் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்குத்தெரியாது. எனது மாமா இறந்தபிறகு அவரது சொத்துக்கள் வாரிசு உரிமைப்படி 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு அவர்கள் அதை வா.சா.ஆ.8 கிரையப்பத்திரம்மூலம் 4 ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தார்கள் என்றால் உயில் இருந்தநிலையில் 1, 2 பிரதிவாதிகள் வழக்குச்சொத்தை விற்றுவிட்டார்கள். வா.சா.ஆ.8 கிரையப்பத்திரம் 31.08.2021 ம்தேதி பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் சட்டப்படிதான் வழக்குச்சொத்தை விற்பனை செய்துள்ளார்கள் என்றாலும், கிரையம்படி சொத்தானது தற்போது 4 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றாலும் சரியல்ல.

8. வழக்குச்சொத்தில் எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6,7 மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவிற்குபின்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது மாமாவின் சொத்துக்களை அபகரிக்க எனது அப்பா வா.சா.ஆ.1 உயிலை தயார் செய்து அதன்படி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம், அதனால்

இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 உயில் எங்களிடம் தான் இருந்தது.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/-M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி